# ஆதி மார்க்க னீதி மொழி

**July 2024**

***இதழ் 36 – ஜூலை மாதம் 2024 வெளியீடு***
***© AMNA Trust, Chennai***



## மூலமந்நிரம்

முத்திபூர்ணம்!
மெய்யாக மெய்யாகவே சதுர்யுகங்னோடி கால மக்களிடத்திலும் உள்ள சர்வ மூலமந்நிர னிருபிக மகான்மியராகிய யுகவான் சாலை ஆண்டவர்களே முத்தி பாலிப்பு.

## பாத பூஜை

சுயம் பிரகாச னித்தியானந்ந பிரம்ம சொரூபத்தினை அறியாது அஞ்ஞானமென்னும் திமிரத்தால் குருடாயிருந்த எங்களுடைய கண்களை ஞானமென்னும் அஞ்ஞன சலாகையால் திறந்ந தேசிகேந்நிரரே தேவரீருடைய திவ்ய திருவடிக் கமலங்ஙளுக்கே னமஸ்காரம்.

## மகாசங்ஙல்ப மந்நிரம்

மறலி என்கிற எமனுடைய அவமான அவஸ்தை வந்து தீண்டும் அடையாளம், கசப்பு தீட்டு பிணனாற்ற ஜலம் வெளியாகி யுகங் னோடிகால னரக வேதனைக்குப் போகாமல் அதைமாற்றி, பரமபத னித்திய மகிழ்ச்சி வாழ்வு வரத்தில் ஏற்றவே சதுர்யுகத்திலும் உண்டான எல்லா ஜாதி மத வேதங்களும் வந்நிருக்க அந்த அகமிய மகா அதிவல்லப தெய்வீக பிரம்மவித்தைச் செயலானது மானெடுங்ஙாலங்ஙளாக மக்கள் புழக்கத்தில் இல்லாது இந்த உலகத்தை விட்டு மறந்து மறைந்நே போய்விட்ட இறுதிக்காலமாகிய இதுனேரம் எமபயத்தைக் கடத்தி மீண்டும் அதே பிரம்மவித்தைச் செயலாகிய சுவர்கப்பதி பரமபத முத்திச் செயலினில் ஏற்றி வைக்கும் கல்கி மகதி என்னும் மூக்குக்கு வெளியே மூச்சு ஓடாத தவமுடைய ஊண் உறக்கமற்ற எங்ஙள் குலதெய்வம் மெய்வழிச்சாலை ஆண்டவர்கள் மெய்மதத்தில் னாங்ஙள் சேர்ந்து ஆகிக்கொண்டிருக்கின்றோம்!

எதார்த்த னன்மனத்தினர் யாராக இருந்தாலும் இதில் சேர்ந்து தேவப்பிறப்பிலே பிறந்து ஆகிக்கொள்வதற்கு ஆண்டவர்களுடைய ஆசீர்பாதம்!



Copyright © AMNA Trust, Chennai

# குருபிரான் அவர்களின் முன்னுரை



ஆதி மார்க்க னீதி அவையின் அங்கங்களே எதார்த்த நன்மன சற்சன மக்களே, பரிசுத்த ஆவித் தெய்வத்தின் திருவருளால் இன்று, இம் மகிழ்ச்சியான தருணத்தில் ஆதிமார்க்க னீதி மொழியின் மின்னணு சஞ்ஞிகை மூன்று வருட நிறைவுடன் 36ஆவது இதழாக மலர்கிறது. தங்கு தடையின்றி மெய்ஞான சிவராஜபாட்டையில் வழிகூடி நடக்கும் தொண்டர்கள் பெற்ற பேரின்ப நிலை யாவும் பொதியப் பெற்றுள்ள இச்சஞ்சிகை நன்மன மக்களுக்கு நன்மை வழங்க நான்காம் ஆண்டில் நா னயத்தை நல்க வருகிறது.

ஆதி மார்க்க நீதி மொழி எனும் நாமத்துடன் வரும் இது, நீதி எனும் பொருள் ஆன மனுக்குலத்திற்கே நித்தியமான ஒன்றாக உள்ளது. நாளொரு மேனி பொழுதொரு வண்ணம் என்ற பொய்யான பழமொழியை விட்டு நாழியோர் மேனி கடிகையோர் வண்ணம் என சாலை ஆண்டவர்கள் அருளியுள்ள நலம் வளர் சாலை வாழ்வின் உன்னதம் உரைத்திட உதயமாகி பிரதி மாதமும் வருவதே இந்த சஞ்ஞிகை.

அனீதியாக என்றும் பொய்யகத்து உறைந்துள்ள மனதை நீதியின் வழியில் ஆக்கி வைக்கும் அரும்பெரும் செயல் பொலிவுடன் ஜீவனுக்கான உணவாக அமிழ்தமாகப் பிழிந்து தொகுக்கப் பெற்று வரும் இந்த சஞ்ஞிகையுள் 36 தத்துவங்களும், 64 கலைகளும், 118 தன்மைகளின் ரகசியங்களும் பொதியப்பெற்றுள்ளன. இதன் சிறப்பை பார்த்து படித்து தொடர்ந்து வரும் எதார்த்த நன்மன மக்கள் யாவரும் வனப்புடனும், வளர்வுடனும், மெய்ஞான அறிவுத் தெளிவுடனும், இன்னது இன்னதென இன்னதுக்கு இன்னதென ஓர்வகை மூவகை ஐவகை எண்வகை பொறுப்பும் உள்ளத்துள் உரிமையுற மெய்ப்பயன் மெய்யாக மெய்யாகவே எதிர் முகத்தில் வைத்து போதிக்கும் நவகிரக கோளரிவாளரின் போதனையைப் பெற வேண்டிய ஒரே நோக்கமுடன் வருவதே இந்த சஞ்ஞிகை.

இவ்வுலகில் வாழும் போதே இறைவனுடன் இரண்டறக் கலந்து பிறவா நெறி எனும் பேரின்பம் அனுபவிக்கும் மக்களாக யாவரும் இருக்க வேண்டும் என்பதே எம் அவா.

கடல்முரசின் கரைகடத்திக்
காட்டும் பஞ்ஞாட்சரமே
கதிசிலம்பின் திசைனாதப்
பதியின் பஞ்ஞாட்சரமே



Copyright © AMNA Trust, Chennai

**என்ற பஞ்ஞாட்சர பதிகம் சிறப்பு போன்று, மாறாத கடலோசை போன்ற இறைவனின் கதி சிலம்பின் நாத ஒலியும் ஓய்வின்றி இந்த ஆதி மார்க்க நீதி மொழியின் வாயிலாக எல்லாக் காலங்களிலும் ஒலித்துக் கொண்டே இருக்கும் எனக் கூறி, எல்லாம் வல்ல எம்பெருமான் சாலை ஆண்டவர்களின் திருவடியை போற்றி வணங்கி இந்த நீதி மொழியை நாம் உங்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக வழங்குகிறோம்.**

**நமஸ்காரம்.**

*சாலை ரவி*

**நிறுவனர், ஆதி மார்க்க னீதி அவை**



Copyright © AMNA Trust, Chennai

*எமனுடைய ஆயுதத்தை எரித்து, மனிதர்களை அவன் கையிலிருந்து மீட்பிக்கின்ற எமது அருங்ஙாரணச் செயலை யாரேனும் வேண்டாமென்று சொல்வார்களா? னம்மைப் போல் உடலெடுத்து வந்துள்ள மனிதர்கள் என்று இச்சித்தே னாம் வந்நோம். முன்காலத்தில் அறியாமையால் சீச்சிக்கழித்தாலும் இன்று இதை விரும்புவார்கள் என்றே, எல்லோருடைய செவிக்கும் போய் எட்டச் செய்யக் கூடியதனைத்தும் முழு முயற்சி கொண்டு செய்துவருகிறோம்.*

*னம் கையில் னாம் ஒரு மருந்நு கொண்டு வந்நிருக்கிறோம். அது அரு மருந்நு - வேத மருந்நு - சிவ மருந்நு - எமன் அணுகாச் செல்வ மருந்நு - ஜீவப்பிணி னீக்கும் தவ மருந்நு. முன்காலத்திலும் இம்மருந்நு கொண்டு வந்நோம். ஆனால் மக்கள் சீச்சிக் கழித்துவிட்டார்கள். இப்பொழுது அதையே இக் கடையில் னாம் கொண்டு வந்நிருக்கிறோம்.*

*மாதவன் தவமருந்நு - சிவமாதவன் பிரம்ம மாதவன் கயிலை மாதவன் மருந்நொன்று எம்மிடம் இருக்கின்றது. அதை வாங்ஙி உண்டவர்களுக்குப் பிறவிப்பிணி தீரும். னிச்சயம் தீரும்.*

*~ சாலை ஆண்டவர்கள்*



Copyright © AMNA Trust, Chennai 

# ஆதி மார்க்க னீதி அவையின் 2024 ஜூன் மாத அவை நிகழ்வுகள் – 2024 ஜூலை மாத வெளியீடு

### 02-06-2024 ~ ஞாயிற்றுக்கிழமை ~ பிரம்மதேசம் சிறப்பு அவை
### தொகுப்பு: ஸ்ரீமதி. விஜயசித்ரா

பரிசுத்த ஆவித் தெய்வம் பரம்பொருள் பிரம்மப் பிரகாச மெய்வழிச்சாலை ஆண்டவர்களின் திருவடி போற்றி, குருபிரான் ரவி அப்பா திருமுன்பாக சிலம்பக் கலையுடன் மேள தாள இசையுடன் மலர்மாரி பொழிவுடன் அவை மலர்ந்தது.

**குருபிரான் அருளமுதம்:**




வேத கலையின் அதிபதியாம் சாலை ஆண்டவர்கள் கொண்டு வந்த அவரவரின் தாயாதி சொத்தான மெய்ச்செயல், இன்று ஆதி மார்க்க னீதி அவையின் செயலாக இதய கமல வாசனாக விளங்கும் இறைவனை தரிசிக்க செய்கிறது. பிரம்மத்தி ற்கான செயல் நடைபெறும் இடமே பிரம்மதேசம். **னாலு முகமாயிருப்பு னாற்றிசையினும் னாகரத்ன ஆசன மெட்டெட்டுமாகுமே** என சாலை ஆண்டவர்கள் அருளியுள்ளபடி, ஞானச் சங்கினை ஊதி நான்முகனின் ரகசியம் அறிந்தவர்களே ஆதி மார்க்க நீதி அவையின் அங்கங்கள். **எவ்வழி மெய்வழி என்ப வேதாகமம் அவ்வழி எனக்கருள் அருட்பெருஞ்ஜோதி** என வள்ளல்பிரான் அருளியபடி கேட்டுத் திருந்தி உடனெழும் திறத்தில் அறிவை அறிந்தவர்களே அழியா நிலத்தை ஆளும் ஆண்டவர்கள் சந்ததி.

*ஜீவசகோதரர் கௌதம்:* முத்தொழில் புரியும் முப்பதியும் ஒரு பொருளாக இறுதி பரியந்தம் வரை நம்மை காக்கும் பரிசுத்த ஆவியாக னீதி எனும் பொருளாக, எழுதாத எழுத்தாக உள்ளது. இதனை அறிக்கை செய்ய வித்தில்லா வித்து விதைக்க வரும் தீர்க்கதரிசிகள் பூமி புல் உள்ள நாளெல்லாம் வருவதுண்டு. அவர்களின் சொல் ஒரு பொருளே நம் ஜீவனை கடைத்தேறச் செய்கிறது.

*ஜீவசகோதரர் வடிவேலன்:* சுயம் பிரகாச அழிவற்ற பிரம்மமே பிரபஞ்சத்தின் ஆதாரம். அதன் இருப்பிடமாகிய தேசத்தை நம் உடலினுள் ஆசான் அறிவிப்பதே உபதேசம். மெய்யாகிய பிரம்மமே அவரவரின் நாமமாகிய அசல் பொருள். அதனை அறிந்து அசல் வாழ்வு வாழ அழைக்க குருபெருமான் எழுந்தருளிய இடமே பிரம்மதேசம்.

**குருபிரான் அருளமுதம்:**

காஞ்சிபுரம் கைலாசநாதர் கோவிலினுள் உள்ள பதினாறு பட்டைகள் கொண்ட சோடச லிங்கத்தின் ரகசியமே ஜனன-மரண வாசல். இதன் உள்ளமை ரகசியத்தை ஆசான் அருளால் அறிவுக்கண் திறக்கப் பெற்றவர்களே அறிய முடியும். ஐவழி விளைவின் அப்பாலாகிய மெய்வழியில் குடியேற மிக அவசியம் பேரறிவின் துணை. உயிர்ப் பயிரேற்றும் ஊரான ஊர் என சாலை ஆண்டவர்கள் அருளிய காரணப் பெயர் அவரவரின் காரண தேகம் என செயலாக



Copyright © AMNA Trust, Chennai 

நம்மிடம் நிரூபணை செய்யும் காமீல்களின் இரக்கமே ஈடிலாச் செல்வம். நம் நெஞ்சகத்து இருளகற்றி ஜீவனை அறியச் செய்யும் சாலைத் தமிழ், செயலாக பழக வேண்டிய ஒன்றாக உள்ளது. மரணமிலாப் பெருவாழ்வின் மார்க்கம் அறிவிக்கும் இவ்வசந்த அழைப்பின் வசம்படிந்து நிசம் திடம்பட எதார்த்த உள்ளம் கொண்ட அனைவரையும் அழைக்கிறது ஆதி மார்க்க னீதி அவை. பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை நிறைவானது.

## 06-06-2024 ~ வியாழக்கிழமை அவை~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஸ்ரீ. வாசுதேவன்

சாலை ஆண்டவர்கள் அருளிய **குன்றாத பேரருளின் மணியே...** என்ற ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.

*ஜீவசகோதரர் சங்கர்:* புது நிலவு தினம், மூன்றாம் பிறை, பௌர்ணமி ஆகிய நாட்கள் பிரபஞ்ச ஆற்றலை மனிதன் உணர வேண்டி இறைவன் வரமாகத் தந்த நாட்களாகும். ஒரு தவசிரேஷ்டர் அருளும் மெய் வணக்கத்தின் மூலமே மனிதன் இதை உணர முடியும். குருபிரானின் அருளாகிய யுகாந்தநாட்டு செல்வம் மூலமே அறியாமை எனும் இருள் விலகி, அறிவு பிரகாசிக்கிறது. தாயாகி தந்தையாகி தெய்வமும் ஆகிய ஆசானால் மட்டுமே நம்மை ஞானபாதையில் நடத்திச் செல்ல முடியும்.

**திரு மெய்ஞானக்கொரல் - வாக்கியம் எண் - 3 தொடர்ச்சி :** முன்வந்த பெரியோர்கள் அருளிய கிரந்தங்கள் யாவும் சாலை ஆண்டவர்கள் அருளியுள்ள சாகா கலை கிரந்தத்திற்கு ஈடாகாது. எந்த ஞான மகத்துக்களும் செய்யாத 69 ஜாதிகள் அடங்கிய பல்லாயிரம் ஆண்-பெண் மக்களை சாலை ஆண்டவர்கள் மெய்யில் நிலை நிறுத்தியுள்ளார்கள்.

**மெய்ம்மண ஞானம்:** மெய் என்று எவரும் வாய் புலம்புவதால் அதை அறிய மாட்டார்கள் என்பது சாலை ஆண்டவர்கள் திருவாக்கு. மண்ணாகிய அழிதேகத்தை மெய்யென நினைப்பது அஞ்ஞானம். அழியாத மெய்ம்மணம் கொண்ட தேகத்தை மெய்யென நினைப்பதே ஞானம். பாவ சங்கார செழிப்பளக்கும் பாடல்கள் கொண்டதே மெய்ம்மண ஞானம். ஆதியும் அந்தமும் கடந்து நடுநிலை அறிந்தவரே நாயகம். எழுவகை தோற்றத்தில் இல்லாத நரனை மனுவாக படைப்பவரே நித்தியராகிய குருபிரான். குளிர்ச்சி பொருந்திய குருபிரானின் பாதங்களில் சேரும் போதே சீடனின் உள்ளமானது பூக்கிறது.

அமானித கடன் வாங்கிவந்த மனிதன் அழியாப்பதி குடியேறிய நாயகத்தின் நாததொனி கொண்டே நற்றாளைக் கண்டு தொழுது தன் அமானிதக் கடனை தீர்க்க முடியும். நம்மிடம் முப்பாழாக இருக்கும் மும்மலமும் புராதன வேதியரின் இரக்கத்தால் முப்பாலாகிறது. மவுத்து எனும் சாமுன் சாகப்பழகும் வித்தையே பிரம்மவித்தையாக மயிர்ப்பாலம் கடக்கும் மலகூத்தாக உள்ளது. அறிவின் வழியில் வரும் புராதன வேதியரின் வாய்மை கேட்டு நம் குற்றங்கள் நீங்கி அறிவின் வழி நடக்கும் போதே கோடி சூர்யப் பிரகாசம் நம்மிடம் குடியேறுகிறது. குருபிரான் அருளிய உபதேசத்தை குலைத்து வாய் சிதறிடாமல் பொறுத்து வாய்மூடிக் காக்கும் செயலே **கண்டவர் விண்டிலர் விண்டவர் கண்டிலர்** என்பதாகும். பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை நிறைவானது.

*குருவின் மார்க்கத்தைப் பின்பற்றுதல் ஒன்றினாலேயே மேலான மோக்ஷம் உண்டாகிறது. ஆகவே மோக்ஷத்தை விரும்புகிறவர்கள் எப்பொழுதும் குருவினிடத்தில் பக்தி செலுத்த வேண்டியது கடமையாகும்.*

***~ குரு கீதை***



Copyright © AMNA Trust, Chennai 

## 08-06-2024 ~ சனிக்கிழமை அவை~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஸ்ரீமதி. ஜீவிதா வடிவேலன்

பிரம்மப் பிரசாச மெய்வழி சாலை ஆண்டவர்களின் திருவடி போற்றும் **அருண்ஞானம் படிந்தொளிரு முகமும் ஜோதி...** என்ற திருப்பாடலுடன் அவை மலர்ந்தது.

**எமபடரடிபடு கோடாயிதக்கூர் - திருவாக்கியம் எண் – 171 :** நம்மை வசியம் செய்து வைத்திருக்கும் வஞ்சக மனதை, நாம் வசியம் செய்யாதவரை பிறவிச் சுழலில் சிக்கியவர்களாகவே இருப்போம். ஆசானின் திருனோக்கிற்கு இணங்கி இட்ட கட்டளை எல்லாம் சிரமேற் தாங்கி வாழ்பவர்களே பிறவானெறி பெற்று தேவப்பதம் பெறுகிறார்கள்.

*ஜீவசகோதரி பானுமதி:* **அல் குரான் - அத்தியாயம் : 17 (பனூ இஸ்ராயில்)** மிஃராஜ் எனும் விண்ணுலக பயணத்தின் இரகசியத்தை உணர்த்துவதாகும். ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஏழு வானம் கடந்து எட்டாம் நிலையிலுள்ள இறைவனை தரிசித்ததின், அகமிய மெய்ப்பொருள் யாதெனில், ஆசான் அருளால் ஐவழி விளைவின் அப்பாலாகிய ஆறாவது அறிவின் உன்னதத்தை உணர்ந்து, ஏழாம் பிறப்புடலம் பெற்று, அகர வடிவாம் அறிவு சொரூபத்தை தரிசிக்கும் தவச்செயலாகும்.

**குருபிரான் அருளமுதம் - மெய்ம்மண ஞானம்:**

பாரமார்த்தீக ஞானத்தின் அகமிய இரகசியம் அருளும் அரிய பொக்கிஷமே மெய்ம்மண ஞானம். கண்ணணூர் எனும் இதயத்தின் நுழைவு வாயிலில் நின்றும், இறைவனை காணாமல் கலங்கிய சீடனை காமீலாகிய குருபிரான் தன் அன்பெனும் வலை வீசி இழுத்து, ஞான கங்கை ஆழியில் சேர்க்கிறார்கள். நம் குல தெய்வம் சாலை ஆண்டவர்கள் தனிகை மணிப்பிரானின் திருவடி நிழலில், பனிரெண்டு ஆண்டுகள் நிலைத்து நின்று பரமகாந்தள சூலம் எனும் சன்னத முத்திரைகளை பெற்ற பின்பும், மேலும் ஓராண்டு தவ விளைவால் சங்கு, துடி, வேல், வாள், சூலம், பராங்குசம் எனும் தெய்வீக முத்திரைகளை தன்னுள் சிவானுபவமாக்கி கொண்டு **வாக்மி மார்க்க னன்னாதராக** திருஅவதாரம் தாங்கி வந்த தவச்செயலையே இத்திருப்பாடலில் அருளியுள்ளார்கள்.

குருநாதர் வீற்றிருக்கும் திசையே குருதிசை. அங்கிருக்கும் தெய்வத் தந்தையின் திருவாய் மொழியே நாதம். பொற்கிண்ண மது பானமெனும் னாதத்தை குருபிரான் அருளும் போது நற்றவ வாணி னாயகியாகவும், நமக்கு பிறவாமை எனும் பெரும் பதத்தை அளிக்கும் போது, பெண் ஆணாக வடிவெடுத்த பதாம் பூரணியாகவும் நின்று விளங்குகிறார்கள் என மெய்ம்மணம் கமழ ஆசான் அருளியதும், பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவானது.

## 09-06-2024 ~ ஞாயிற்றுக்கிழமை ~ காஞ்சிபுரம் அவை
## தொகுப்பு: ஸ்ரீ. விஜயகுமார்

பிரம்மோதய மெய்வழி சாலை ஆண்டவர்கள் அருளிய **அருங்கோடை பாலைவனம் கானகத்தில் அகப்பட்டு...** எனும் ஞான அகவல் பாடலுடன் அவை மலர்ந்தது.

*ஜீவசகோதரர் கௌதம்:* சுருதி, யுக்தி, முயற்சியாலும் மனம், மெய், மொழியாலும் எட்ட முடியாத பொருள் திருவெனும் அச்சரம். அதுவே சொல் மூன்று அச்சரமாகிய ஒரே அச்சரம். நாதமெனும் நளபாகத்து அருமருந்து உண்டவர்க்கே பிறவிப்பிணி தீர்கிறது. இறந்தவனை உயிர்ப்பிக்கும் செயலுள்ளதே கஞ்ஞா. மூவுலகிலும் ஊடுருவி நிற்கும் நற்றாளை, ஆதி மான்மியத்தில் நடமாடு ஜீவாத்மா, எதார்த்த பரமாத்மா என 13 நிலைகளில் சர்வ மூலமந்திர நிரூபிகரே நிரூபிக்கின்றார்கள்.



Copyright © AMNA Trust, Chennai 

**குருபிரான் அருளமுதம் :**

பிறவிச் சூழலிலிருந்து தப்பும் எண்ணம் உள்ள மனிதனே மெய்மணத்தவர். தேடும் பொருள் இன்னதென தெரிந்து தேடுவதே பலன் தரும். மெய் மகத்துக்களின் நாதமே மக்களுக்கு ஞானவழி காட்டும் திசை. ஞானமும், இறைவனும் தனக்கு நன்றாகத் தெரியும் என மக்கள் எண்ணுவதே அறியாமையின் உச்சம். அறிவுநிலை அறிய வைக்கும் செயல் பெரியோர்கள் திருக்கரத்தில் உள்ளது. பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஆசீர்பாதமே ஆதி மார்க்க னீதி அவையை வழி நடத்துகிறது.

*ஜீவசகோதரர் சங்கர்:* புதிய மக்களையும் அசைவற்ற குணக்குன்றாம் பிரம்மத்தில் ஆக்க வேண்டி குருபிரான் இரக்கத்துடன் எழுந்தருளிய நிகழ்வே **02-06-2024 ஞாயிற்றுக்கிழமை** நடைபெற்ற **பிரம்மதேசம் சிறப்பு அவை.** நிஜமான அடக்கம், பரிசுத்த பிரயாணத்தின் பத்து அடையாளம், செத்திடம், பிறந்திடம், இனி சாகாதிருப்பிடம் இவற்றின் அகமிய ரகசியமும் காஞ்சிபுரம் கைலாசநாதர் கோவிலின் சோடச லிங்கம், காளங்கிநாதர் சன்னதியின் சிறப்பு பற்றியும் குருபிரான் வழங்கிய அருளமுதை அவர்களின் தயவால் அறிவை அறிந்த பண்டிதர்களே அறிவர். பரிசுத்த ஆவித் தெய்வம் அருளிய ஸ்தோத்திரப் பாடலுடன் அவை நிகழ்வுகள் நிறைவானது.

## 13-06-2024 ~ வியாழக்கிழமை அவை~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஸ்ரீ. தியாகராஜன்

**சீர்மேவு மெய்ஞ்ஞான தெய்வச் சிரோன்மணியைப் பாரோர் புகழ்ஞான பண்டிதரை யான்மறவேன் ...** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை உதயமானது.

**குருபிரான் அருளமுதம்:**

சிரோன்மணி, சிகாமணி, மனோன்மணி, ஞானமணியாகத் திரண்டு பொன்னான வாக்காக வெளியாகும் இடத்தை, தெய்வ சிகாமணியை அறிந்த மக்களே அறிவர். குருவின் அருளால் மாற்றிப் பிறக்கும் வகையறிந்து மறுபிறப்பு பெற்று மெய்உணர்வு ஓங்கிய மக்களே ஆதி மார்க்க னீதி அவையின் அங்கங்கள்.

**திரு மெய்ஞ்ஞானக்கொரல் - வாக்கியம் 03-ன் தொடர்ச்சி :** சர்வ உபதேச ரகசியமும் உள்ளடங்கிய செயலே அன்பே சிவம். எதார்த்த உள்ளம் கொண்ட சீடனின் மேல் ஆசான் வைக்கும் அன்பே அவனை சிவமாக்கும். ஜீவனாகிய குணத்தைக் கண்டு ஜென்ம சாபல்யம் பெறவந்த வடிவே மனிததேகம். உணர்ச்சி மனதுடன் சேரும்போது மூன்று குணமாகவும், மெய்யுணர்வு அறிவுடன் சேரும்போது நிர்க்குணமாகவும் உள்ளது.

**மெய்ம்மண ஞானம்:** மாறாத மணமே மெய்ம்மணம். சொல் நயனக்கலை மூலமாக தீர்க்கமாக காணும் செயலே தீர்க்கதரிசனம். குருபிரானிடம் பெற்ற செயல் கொண்டு இறவாமல் இருக்கும் வழி காண்பதே பிறவாநெறி. ஞானிகள் அருளிய வேதங்களும், உண்டாக்கிய கோவில்களும் மனிதன் ஆறாவது அறிவை அறிந்து பிறவாநெறி பெற்று அமரத்துவம் அடைவதற்கே ஆகும். குருவின் அருளால் தேவனாகி, தெய்வமாகும் நிலையை அடைவதே மனுவின் கடமை. ஆதி நாயகமாக மனுவுக்குள் வீற்றிருக்கும் ஜீவனை அறியவைக்கும் **சுடாத தீயாக, புகையாத கனலாக** விளங்குவதே அருட்பெருஞ்ஜோதி என்ற குருபிரானின் ஆசீர்பாத உரையுடனும் பரிசுத்த ஆவி தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடனும் அவை நிறைவானது.



Copyright © AMNA Trust, Chennai July 2024

## 15-06-2024 ~ சனிக்கிழமை அவை ~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஸ்ரீமதி. கல்பனா விஜயகுமார்

பரிசுத்தஆவி தெய்வத்தின் திருவடி போற்றி **ஓதுமறை வேதநெறி உண்மையாய் ஒழுகிவளர் யோக்கியர்களாற் புகழ்கின்ற...** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.

**குருபிரான் அருளமுதம்:**
ஞானிகளின் திருவாக்கினை நெஞ்சத்தில் **ஆனி** அறைந்தது போல் பதிய வைக்கும் **ஆடி**ய பாதத்தால் மெய்யறிவு பெற்று தேவன் **ஆவ நீ** என்பதே **ஆனி-ஆடி-ஆவணி** எனும் ஜீவனின் ரகசியம் உணர்த்தும் தமிழ் மாதங்களின் சிறப்பு.

**கோடாயிதக்கூர் திருவாக்கியம் எண் 178 :** அறிவுத் திருமேனி தாங்கி ஞானிகள் வரும் வசந்தகாலத்தில் அவர்களின் வசந்த வாவிலிருந்து கமழும் வசந்தத்துள் ஆகி, நம் மும்மலங்கள் பொடிந்து ஜீவன் கண்டு ஜீவ சிம்மாசனத்தில் குடியேறி வாழும் மெய்ச்செயலே **காத்துள்ள போதே தூத்திக் கொள்** என்பதாகும். இச்செயலை ஆண்டவர்கள் **ஊதத் தெரியாதவர்க்கு ஊமையூமையே ஒட்டியே பிடித்தவர்க்கு ஊதுமே சங்கு** என அருளியுள்ளார்கள்.

*ஜீவசகோதரர் குமார்:* **சத்திய வேதம் – 1 தீமோத்தேயு 6 : 15, 16 -** *பிரசன்ன செயலைத் தேவன் தம்முடைய காலங்களில் வெளிப்படுத்துவார். அவரே மனுஷர் யாவரும் கண்டிராத சகல வல்லமையுள்ளவர் ஆமென்* - கர்த்தராகிய குருபிரான், நவகிரக கோள்களின் பிடியில் சிக்கியுள்ள மனுவை மீட்டு, சாமுன் சாகப்பழகும் சன்மார்க்க செயலில் பழக்குகிறார்கள். மனிதனைப் பிரகாசிக்கச் செய்யும் மெய்யான ஒளியை அறிய வைத்து மனுவைத் தேவனாக்கும் தேவாதி தேவனாகிய அவரே கர்த்தராகிய குருபிரான்.

**குருபிரான் அருளமுதம் - மெய்ம்மண ஞானம்: கண்டவர் விண்டிலர் விண்டவர் கண்டிலர்** எனும் திருவாக்கியம், ஞானிகள் தம்மை நாடி வரும் சீடர்களை மௌனத்தில் ஆக்கி மௌன மாமணி மாடத்துள் குடியேற்றும் செயலாகும். அவர்கள் மக்களை உயிரினும் மேலான ஒழுக்கத்துடன் வாழச்செய்து அறியாமையை வெட்டி வீழ்த்தும் அறிவு நிலைக்கு உயர்த்துகிறார்கள். ஹக்கீகத் முகம்மது எனும் கலைவாணி மீட்டும் னாதமே நமது அறிவை னாதமாக விளையச்செய்கிறது. அவரவரிடத்தும் உள்ள முக்குணங்களின் நிலையே அரக்கர், வானவர், மனு என்பதாகும். நிர்க்குணம் கொண்ட குருபிரானே, நம் அரக்க குணம் விலக்கி உள்ளத்துள் விளங்கும் பரத்தின் நன்னிலையை காணச் செய்கிறார்கள். அபரமாக வரும் ஆசானின் நாத துணையுடன் அகமுகமாகப் பயணம் செய்து திருச்சிற்றம்பலப் பொருளை தரிசித்து மௌனத்தில் ஆகும்போது பரமாகிறது. சார்ந்ததின் வண்ணமாக மாறக்கூடிய எழுதாத எழுத்தாகிய ஆறாவது அறிவு பெற்ற மனிதனுக்கே நீதியெனும் பொருள் ஆகவேண்டிய கடன் கடமையாக உள்ளது. குருவருளால் எண்ணம், மனம், நினைவு, கவனம், ஜீவன் எனும் கருத்தை விட்டகலாது நெற்றியில் விளங்கும் வக்ர துண்டமாகிய கண்டத்தின் தலையில் கால் வைக்கும் போதே வேர் மேலும் தலை கீழுமான கற்பகத் தருவை காணலாம். காலமற்ற அவ் இடத்தில் குடியேறும் போதே மூவினைகளும் அற்று சாயுச்ய பதவி கிட்டுகிறது என்ற குருபிரானின் அருளமுதுடனும், பரிசுத்த ஆவித்தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடனும் அவை நிறைவானது.

*னித்தியம் பிரம்ம ரஸத்தைப் பருகி எவன் பரமாத்மாவினிடத்துத் திருப்தியாயிருக்கின்றானோ, அவன் இந்திரனைத் தன் அடிமையாகக் கருதுகின்றானெனின், பிறகு அரசர்களைப் பற்றிப் பேசுவானேன்!*

***~ குரு கீதை***



Copyright © AMNA Trust, Chennai 

## 16-06-2024 ~ ஞாயிற்றுக்கிழமை ~ காஞ்சிபுரம் அவை
## தொகுப்பு: ஸ்ரீமதி. கவிதா வெங்கட்

**கேள்வியின் னாயகனும் அதனகத்து உறைந்து ஆண்ட சலாசனர் பரிசுத்த ஆவித் தெய்வம் சாலை ஆண்டவர்களின் வதனகத்திருந்து வெளியேறிய பதுமராக பளிங்கொளிர் ஏற்றும் முதுமொழியாம், காவலான புராதன வேதியர்...** என்ற குருஸ்தோத்திரப் பாடலுடன் அவை உதயமானது.

**குருபிரான் அருளமுதம்:**




தந்தையின் சுக்கிலாம் பரனாட்டில் வாழும் நாளிலும், தாயின் கருவறையிலும், தரணியில் வந்த காலத்தில் மனம் தடுமாறி, ஆபத்து வந்தந்த நேரத்திலும் ஆங்காங்கு முன்வந்து தொடர்ந்து கூடவே நின்று காத்திடும் எம்மானை தொழுதல் செய்யும் ஆவல் ஓங்கினால் நமது இச்சைகள் யாவும் கழன்று ஓடும். அரியானை அறிய வைத்து அறிவு இன்னதென அறிய வைத்து தன் வாய்மைத் தணலால் நம்மை அந்தணன் என்ற பதத்தில் பிரட்டி சாவில் இருந்து மீட்டெடுக்கும் வல்லமை உள்ளவர்களே மெய்ஞானிகள்.

பேசிக் கொண்டே இருக்கும் நம் மனதை மௌனத்தில் ஆழ்த்தும் மெய் ஞானியே மௌனி. நவமணிப் பதி எனும் மணிமந்திர ஔஷதமே, உப்பாக நம் உப்புப் பாண்ட உடலில் உள்ளது. படித்தாலே போதும் ஜீவனைக் கண்டு ஜென்ம சாபல்யம் அடையலாம் எனும் அஞ்ஞான விஷத்தை விதைக்கும் வீணர்கள் யாவரும் விஷ ஜந்துக்களே. ஞானமணியாம் சிரோன்மணியை அகத்தில் உருட்டும் அறிவைப் பெற்றவர்களே ஆதி மார்க்க னீதி அவையின் அங்கங்கள். குருவருளால் இறைவனை அறிந்து வழிபடுவதே வழிபாடு. பணம், மதிப்பு, புகழ் யாவும் கடந்த ஒன்றாக இருப்பதே ஞானம். அறியாமை இருள் நீக்கி, ஆறாம் அறிவை அறிய வைத்து இருதயத்தில் இறைவனை காட்டும் குருவே சிவம். அவரவருக்கும் நித்திய ஆனந்தத்தை தரும் சுயம் பிரகாச பொருளை அறிய வைக்கும் திருவுருவே தெய்வ தீபம்.

**விழிப்புலகில் நம்மை ஏற்றி வைக்கும் மூஷிக வாகனம் என்ற ஒரே பொருளை வைத்து அருளிய 72 வரிகள் கொண்டதே விநாயகர் அகவல்.** ஒரு மெய்யான குருபிரானை சரணாகதி அடைந்தே பிறவாமை பெற முடியும். அகமியத்தில் இருக்கும் இன்னொரு தேகத்தில் சென்று வாழ்வதற்கான வழி அருள்வதே உபதேசம். வேதத்தை விளங்கச் செய்யும் பாத ரகசியம் அறிவிப்பதே பிரம்மவித்தை. தன்னை அறியும் தவநிலை ரகசியம் உணர்த்துவதே ஆகம விதிப்படி அமைந்த ஆலயங்கள். ஜீவனுக்கான நற்கதி வேண்டியே இறைவனிடம் வேண்டுதல் வேண்டும்.



Copyright © AMNA Trust, Chennai July 2024

*ஜீவசகோதரர் வடிவேலன்:*

**வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்**
**வைத்தூறு போலக் கெடும்** **(திருக்கொரல்)**

சாவருமுன் சாகப்பழகுவதே வருமுன் காப்பது. ஏன் பிறந்தோம் என்ற எண்ணம் கூட வராத சிற்றின்ப வாழ்வை விட்டு பேரின்ப வாழ்வு வாழ வழி அருளும் பெரியோர்களின் சொல்வாக்கே செல்வாக்கு. வினையற்ற சொர்க்க பதி வாழ்வே ஜென்ம சாபல்யம் என்ற பகிர்வுடனும் பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடனும் அவை நிறைவானது.

## 22-06-2024 ~ சனிக்கிழமை ~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஸ்ரீமதி. ஜீவிதா வடிவேலன்

பிரம்மப் பிரகாச மெய்வழிச் சாலை ஆண்டவர்கள் அருளிய **சென்மந் நோறும் செய்த கன்மங்ஙடைத் தேற்ற வந்ந ...** என்ற இடப்பாக ஆசாரக் கண்ணி பாடலுடன் அவை மலர்ந்தது.

**எமபடரடிபடு கோடாயிதக்கூர் – வாக்கியம் 179 - குருபிரான் அருளமுதம்:**
**படிப்படக்கி கேள்வியெலாம் பற்றற விட்டடக்கி பார்த்திடலும் அடக்கி... (திருவருட்பா)** தன்னிலக்கண சாவியை தன்னகத்தே வைத்திருக்கும் வள்ளலாகிய குருபெருமானின் எண்ணத்திற்கு மாற்றமாகவும் அருவருப்பாகவும் இருக்கின்ற படிப்பை, கேள்வியை, பார்த்திடலை, கந்தத்தை விட்டு விலகி, அறிவு சொரூபரின் திருனோக்கிற்கு இணங்கி நடப்பவர்களே பேரின்ப பெருவாழ்வில் குடியேறி வாழ்கிறார்கள்.

*ஜீவசகோதரர் விஜயகுமார்:* **பரிசுத்த வேதாகமம் - ஜேம்ஸ் அதிகாரம்: 5** நீதி, நியாயம் வழங்கும் நியாய அதிபதியாம் குரு பெருமானின் சத்திய வார்த்தைகளில் அபிஷேகம் செய்து கொண்டவர்களே, எமனின் வழக்கிலிருந்து விலக்கப்பட்டு சாயுச்சிய பதம் பெறுகின்றனர்.

**யோவான் அதிகாரம்: 1** கிறிஸ்துவுக்கு விரோதமான அந்தி கிறிஸ்து என்பவர்களே நிலையற்ற நீர்க்குமிழி வாழ்வில், பொய்ப்பொருள் தேடி மனதை கீழான குணத்தில் செலுத்தி பிறவிப் பெருங்கடல் கடக்க இயலாது உழல்கின்றனர் என உணர்த்துவதே இந்த திருவசனங்கள்.

*ஜீவசகோதரர் சிரஞ்ஜீவி:* **செல்போன் (Cell phone) பயன்பாட்டின் நன்மை / தீமைகள்:** நம் அன்றாட வாழ்வின் அத்தியாவசியமாகி விட்ட செல்போன் மூலம் இணையதள வசதி, தொலை தொடர்பு, கல்வி, ஆராய்ச்சி, அவசர நிலை பயன்பாடுகள் என பல நன்மையுடன் அதற்கு இணையான தீமைகளும் உள்ளன. உடல் சார்ந்த தீங்குகளும் மன பாதிப்புகளும் ஏற்படுத்தும் செல்போனை அவசியம் நேரும்போது உபயோகிப்பதே உடலுக்கும் மனதுக்கும் நன்மை தரும்.

**மெய்ம்மண ஞானம் -** *ஜீவசகோதரர் சங்கர்:* முக்கண்ணனாம் குருபிரானின் நாதத் தொனியிலிருந்து பிறங்கும் கோடி சூர்ய பிரகாச ஒளியின் கிரண வீச்சே கண்ணனூர் எனும் இதய வாசலில் நம்மை நுழையச் செய்து உயிரின் நிலைப்பிடமாகிய ஞான கங்கை ஆழியில் சேர்க்கிறது. **னல்ல தண்ணீர் கடல் திருப்பாற் கடலதுவு மெங்ஙே, னஞ்ஞிருந்ந தெங்ஙே யுண்டு பிழைத்த தல மெங்ஙே** என சாலை ஆண்டவர்கள் அருளிய பிரகாரம், பாற்கடலை கடைந்து எடுத்த அமுதமாகிய குருபெருமானின் நாதமே, பரம காந்தளம் எனும் சூலமாக, முக்கூரு கத்தியாக, சுடாத தீயாக, புகையாத கனலாக உள்ளது. தென்னாடுடைய சிவம் வீற்றிருக்கும் எல்லையாகிய குரு திசையில் நம்மை குடியேற்றி வைப்பதும் அதுவே என்ற பகிர்தலுடனும், பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடனும் அவை இனிதே நிறைவானது.



Copyright © AMNA Trust, Chennai 

## 23-06-2024 ~ ஞாயிற்றுக்கிழமை ~ காஞ்சிபுரம் அவை
## தொகுப்பு: ஸ்ரீ. கிருஷ்ணமூர்த்தி

**குருபிரான் அருளமுதம்:**

மாதா, பிதா, குரு, தெய்வம் யாவும் ஒன்றாகச் சேர்ந்த ரூபமே குருபிரான். சேவை பூமி என்பது மங்களப் பொருளான நந்தி, திருவடி சேவை செய்யும் பூமியாக உள்ளது. மனமது செம்மையானால் மந்திரம் செம்மையாமே என அகத்தியர் பெருமான் அருளியுள்ளபடி மாசற்ற பளிங்கி மாளிகையாக மனம் மாறி நிர்க்குணம் ஆகும் போதே மோட்ச சாம்ராஜ்யம் அடைய முடியும். ஆன்மா எனும் ஜீவனாகிய பசு தன் சொந்த வீட்டில் குடியேறும் செயலை செய்து வைப்பவரே மெய்யான குருபிரான். அவர் தன்னைப் போல் பிறரையும் ஆக்குவதே தன்மயம் ஆக்கும் செயல். அறிவு வடிவாக வரும் குருபிரானின் அறிவை முன்வைத்து அதன்படி வாழும் வாழ்வே நிகரற்ற வாழ்வு.

*ஜீவசகோதரர் சங்கர்:* நான்கு தேகத்தின் ரகசியமே நான்மறை. பிரணவத்தில் இருந்து உண்டான பிராணனின் இருப்பிடத்தை ஆசான் அருளால் அறியும் செயலே பிரம்மவித்தை. இருதய சுத்தமுடன் பாழில் மனதை விடாதவரே பரமஞானி. புலன் வழியாக சென்று வீணாகும் வயது வாழ்நாளை ஆசான் அருளிய உயிரினும் மேலான ஒழுக்கத்தின் மூலமே மீட்க முடியும்.

*ஜீவசகோதரர் கௌதம்:* அவரவரின் உள்ளத்தில் மோட்ச தீபம் ஏற்றி வைப்பது ஆசானின் திருக்கரமே. புல் முதல் சகல பிறப்புகளும் பிறந்து இளைத்தேன் எம்பெருமான் **மெய்யேயுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்** என சிவபுராணத்தில் அருளியுள்ளபடி வீடு பேறாகிய மோட்சம் பெற வந்ததுவே மானிடச்சட்டை. நம் இதயக் கமலத்தில் இருக்கும் நற்றாளை தரிசிக்கச் செய்து நம்மை சிவமாக்கும் குருபிரானின் அன்பே சிவம் எனும் பகிர்வுடனும், பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடனும் அவை நிறைவானது.

## 23-06-2024 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சிவகாசி அவை
## தொகுப்பு: ஸ்ரீ. ஜெய்குமார்

பரிசுத்த ஆவி தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.

**குருபிரான் அருளமுதம்:**

அப்பனாக வரும் ஐயனாகிய குருபிரான் தன் **அமுத னா** கொண்டு பொழியும் வாய்மையயே சொரிதல் என்பதாகும். நம்மை அறிவு வடிவாக மாற்றும் பொருளைக் காண்பதே தரிசனை. சார்ந்ததின் வண்ணமாக மாறும் ஜீவனாகிய அறிவே எழுதாத எழுத்தாகும். ஓரறிவிலிருந்து ஆறறிவின் தன்மையை அறியும் வல்லபம் மனு ஒருவனுக்கே உண்டு. பேரனைத்தும் பெற்ற இறைவனிடம் அறிவைப் பெற்றோரே பெற்றோர்.

*ஜீவசகோதரர் திருமுருகன்:* மெய்க் குருபிரான் சுட்டிக் காட்டுவதே நிஜமான அன்பு. நம்மை படைத்தவன்மேல் நாம் வைக்கும் அன்பே நம்மை சிவமாக்கும். நடுப்பொருளாக, உயிர் சக்தியாக, பிரணவமாக நம்மை இயக்கும் பரம்பொருளின் அன்பே நிகரற்றது. அதனை ஆசான் அருளும் அறத்தின் மூலம் அறிந்து, மங்கள அறிவு சார்ந்த னித்திய வாழ்வில் குடியேறி வாழ்வதே மரணமிலா பெருவாழ்வு.

*ஜீவசகோதரர் பாலசுப்பிரமணியன்:* ஒரு மெய் குருபிரானின் பரிசுத்த ஆவி மூலமாக நாம் மறுபிறப்பு பெற்ற நாளே பிறந்தநாள். நம் சுத்த நினைவே ஆசானின் சத்தத்திற்கு செவி கொடுத்து மனதை நிலை நிறுத்தும்.



Copyright © AMNA Trust, Chennai July 2024

*ஜீவசகோதரர் நேதாஜி:* அவரவரின் பெயருக்குரிய பொருளை அறிவதற்கே ஆன்றோர்கள் ஆலயங்களை உண்டாக்கினர். நாம் இவ்வுலகிற்கு வந்ததின் நோக்கம் உணர்த்தவே வேதங்கள் உள்ளன. வேத வழி நடப்பதற்கான வழி காட்ட வந்தவரே குருபிரான்.

*ஜீவசகோதரர் முனியாண்டி:* புண்ணிய உருவாக வரும் ஆசான் அருளால் புண்ணியத்தை அறிவதே மீட்புக்கான வழி. மாறாத மணம் கமழும் மெய்ம்மணமே இறப்பொழிக்கும் சீர் மணம்.

*ஜீவசகோதரி மணிமொழி:* தன்னை அறியாத நரனே புறப்பொருளில் நாட்டம் கொள்கிறான். நரனை சங்காரம் செய்து மனுவாக மாற்றும் நித்தியனாகிய குருபிரான் அவனது விதியை மதியாக மாற்றி புறத்தில் அலையும் மனதை அகத்தில் திருப்பி அறிவாக மாற்றுகிறார்கள்.

*ஜீவசகோதரி உமாராணி:* தந்தையின் மூலம் உண்டான நமது அனித்திய பிறப்பை மாற்றி மறுபிறப்பு அளிக்கும் பரமதந்தையின் ஈடற்ற அன்பின் மேன்மையை உணர வைக்கும் செவிச் சுவையே மேலான செவிச் செல்வம்.

*ஜீவசகோதரி அன்னபூரணி:* அறிவின் அடிப்படையே இறைவனின் படைப்பு யாவும். கருப்பை கூடிக் கலந்த நம் வினைத் தொடரைத் தீர்த்து பிறவாமையில் நம்மை ஆக்கி வைக்கும் ஆசான் அவர்களே நம் வாழ்நாள் கணக்கை லாபக் கணக்காக மாற்றி, தேகத்தை ஆன்மா லயமாகும் ஆலயம் ஆக்குகிறார்கள்.

ஜீவசகோதர சகோதரிகளின் முத்திப் பேருரையுடனும் பரிசுத்த ஆவி தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடனும் அவை நிறைவானது.

*குருவானவர் இராஜஸ மயமான பிரம்மாவாய்ச் சிருஷ்டிக்கின்றார். சத்துவ மயமான விஷ்ணுவாய் இரஷிக்கின்றார். தாமஸ ருத்திர வடிவமாய்ச் சங்ஙரிக்கின்றார்.*

***~ குரு கீதை***

## 27-06-2024 ~ வியாழக்கிழமை அவை~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஸ்ரீமதி. புன்னகை மகேஷ்குமார்

**உலக நிலை முழுதாகி...** எனும் வள்ளலார் அருளிய திருப்பாடலுடன் அவை மலர்ந்தது.

**குருபிரான் அருளமுதம்:**

சித்தர்களும், ஞானிகளும் அருளியுள்ள மெய்யான வழிபாடு அறிவதற்கான வழி, அறியாமையை முதலில் நாம் அறிவதேயாம். பிறப்பும் பிறவாமையும் அறியவல்ல அறிவு வடிவான தேகமே மனிதவடிவு. நினைவென்னும் ஆகாயத்தில் ஏற்றும் தீமையும், கிரகங்களின் நாயகனான மனம் போன போக்கில் செல்வதுமே பிறவிச்சுழலின் காரணம். மனமெனும் பளிங்கு மாளிகையுள் ஊற்றும் கழிவு நீரே கீழான எண்ணங்கள். மனதால் உண்டாகும் வினையை அறுக்கும் செயலே பிரம்மவித்தை. அழி தேகத்தை அழியாதது போல் காட்டுவதே மாயக்கூத்து.

**நாரணற்கு ஞானத் தமிழ் புரிந்த நான்** என பூதத்தாழ்வார் அருளியதை சாலை ஆண்டவர்கள் **உயிரெழுத்து 12ம் நான்தான்** எனவும், இரண்டற்ற ஒன்றாக இருப்பதே **ஔ** வுகை வசமாகுதல் எனவும் அருளியுள்ளார்கள். கலிமாப் பொருளின் ரகசியத்தையே சாலை ஆண்டவர்கள் முரீதுச் சுருக்கமாக அருளியுள்ளார்கள். நம் அழிதலையை அழியாத் தலையாக மாற்றும் குருவிற்கான காணிக்கை நம் தலையே. இறைவன் மனுவுக்கு வழங்கிய தனிச்சீதனத்தின் உன்னதம் உணர்ந்த மக்களே ஆதி மார்க்க நீதி அவையின் அங்கங்கள்.



Copyright © AMNA Trust, Chennai 

**திருமெய்ஞ்ஞான கொரல் வாக்கியம் எண் 3ன் தொடர்ச்சி:** பக்தி மார்க்கம் என்ற பெயரில் ஆறு கால பூஜை செய்து கால் நடையாக, வேண்டுதல் என்ற பெயரில் தேகத்தை எல்லாம் தழும்பாக்கி காயம் ஆக்கி, பக்தியென வெறி கொண்டு வழிபடும் மாக்களின் நிலை அறிவை தெரியாமல் அழிவை நோக்கியே இருக்கிறது. அளவற்ற கடவுள் பக்தி இருந்தாலும், கடவுளை அறிவதற்கான அறிவை முதலில் அறிய வேண்டும். அறியாமை எனும் இருள் விலக்கி, அருள் விளக்கின் ஒளி காட்டி காலனை அஞ்சு வைக்கும் அஞ்ஞனத்தை அருள்பவரே ஆசான். ஒழுக்கமற்ற பூஜை வழிபாடு புனஸ்காரம் யாவும் நீர் மேல் எழுத்தே.

*ஜீவசகோதரர் சங்கர்:* ஒழுக்கம் சார்ந்த மெய்ஞான வாழ்வே அறிவின் வழி. நம்மை சீர்குலைக்கும் கிரகங்களின் தலைவனான மனதை அஸ்தமிக்கச் செய்யும் குருபிரானே கிரகஸ்தன். எண்சாண் உடலுக்குப் பிரதானமான சிரசின் சிறப்பை உணர்த்தும் சீரிய வழியே மெய்வழி. அசைவற்ற குணக்குன்றான பிரம்மமே அசைவுற்று சக்தி வடிவாகிறது. புலனாகிய விந்தும், பொறியாகிய நாதமுமே தோற்றம்-தோற்றமில்லாமை இவற்றின் காரணமாக உள்ளது. முக்குணம் அற்ற நிர்க்குண நிலையையே சாலை ஆண்டவர்கள் பெருங்நுண பணப்பை என அருளியுள்ளார்கள். ஒரு மெய்க் குருபிரானின் செழுஞ்ஞீதள மனோ நோக்கிற்கு ஒத்து வாழ்வதே உலகத்தோடு ஒட்ட ஒழுகல் என்பதாகும். கங்குல் பகலற்ற இடமே பிறவா நெறி பெறும் இடமாகும். பரிசுத்த ஆவி தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை நிறைவானது.

## 29-06-2024 ~ சனிக்கிழமை அவை~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஸ்ரீமதி. கல்பனா விஜயகுமார்

பரிசுத்தஆவி தெய்வத்தின் திருவடி போற்றி திருவருட் பிரகாச வள்ளலார் அருளிய **பொங்குபல சமயமெனும் நதிகளெல்லாம் ....** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.

**குருபிரான் அருளமுதம்:**

சகல உயிரிலும் இலங்கும் ஜீவனை அறிந்து சிவமான ஜாதியே மேல் ஜாதி. வினை விதைக்கும் புலன்களை வென்ற வீரனே ஜாதிமான்.

**கோடாயிதக்கூர் திருவாக்கியம் 180:** ஒரு தேவபிரானின் திருஆலவாய் அமுதான நாத மருந்தால் பித் எனும் கசப்பைப் போக்கி புத் என்னும் நரகிலிருந்து மீளும் திறன் பெற்றவனே புத்திரன். நம் குற்றங்களை குணங்களாக, குற்ற நாளை உற்ற நாளாக மாற்றும் செயலுள்ளதே சாலை ஆண்டவர்கள் அருளிய திரு வாக்கியம் யாவும்.

*ஜீவசகோதரர் குமார்:* **சத்தியவேதம் : யோவான் - 5 : 22, 24, 25 :** பிதாவையும் குமாரனையும் மறுதலிப்பவன் அந்திக் கிறிஸ்து. ஆதிமுதல் நீங்கள் கேள்விப்பட்டது உங்களில் நிலைத்திருந்தால், நீங்கள் குமாரனிலும் பிதாவிலும் நிலைத்திருப்பீர்கள். நித்திய ஜீவனை அளிப்பேன் என்பதே அவர் நமக்குச் செய்த வாக்குத்தத்தம். அறியாமையை விதைக்கும் பொய்யனே அந்திக்கிறிஸ்து. அறிவாக இலங்கும் நீதியான மெய்வழியில் தேவ பிதாவாகிய குருபிரானின் திருவாக்கில் நிலைத்திருந்தால், **கு** எனும் அறியாமை இருளிலிருந்து மாறிய குமாரனிலும், **நான்** எனும் வழியாகிய சத்திய நித்திய ஜீவனை அறிந்தும் நிலைத்திருப்பர்.

*ஜீவசகோதரி பானுமதி:* **திருக்குரான் : அத்தியாயம் - 18 (அல் கஹ்ஃபு)** அசையாத சைவ நிலையை குறிப்பதே **அல் கஹ்ஃபு** எனும் மலைக்குகை. கல்பெனும் குகைக்குள் தூங்காமல் தூங்கி முப்பாழ் கடந்து அப்பால் மூலக் குகையில் ஒண்டி ஒரு மனமான தவத்தால் பேரின்பம் அனுபவிப்பதே ஞானிகளின் செயல். தன் எனும் ஜீவ குகையே பெலஞானக் கண் இருக்கும் தவத்தலமாக பேரின்பம் அனுபவிக்கும் இடமாகவும் உள்ளது.



Copyright © AMNA Trust, Chennai July 2024

**குருபிரான் அருளமுதம் - மெய்ம்மண ஞானம்:**

புலன், பொறி, மனம் அடங்குவதற்கான பாடலே மெய்ம்மண ஞானம். செந்திலதம், செந்தூரம் எனும் மங்களப் பொருள் இருக்கும் நிழலாடும் பீடத்தில் குருவருளால் ஏறி, குரு சொன்ன ஆசனமிட்டு ஓதாமல் ஓதும் செயல் செய்வதே சேவையாகும். இதுவே மோனத்தில் உலாவும் நிலை. ஆசான் அருளால் அரிதுயிலுடன் மனமற்ற பரிசுத்தத்தில் சிந்தை ஒன்றி சிவாயமஞ்ஞையும் சேவை கண்டு கலப்பதே அகம் பிரம்மாஸ்மி எனும் பிரம்ம னிலை. கியாமத்தின் வெளியே மகஜர் மைதானமெனும் ஜீவனின் இருப்பிடமாக, புலன், பொறி கடந்த வினையற்ற இடமாக உள்ளது. அந்தரத் துந்துமி முழங்கும் அவ்வரங்கமே சிவ சேவை செய்யும் ஓயாத்தொழுகை நடைபெறுமிடம். ஏகாம்பர பதத்தில் எழிற்பொன்னுடம்பு எடுத்து என்னாளும் வாழும் வரம் பெற்று விதி என்ற எல்லையில் திரும்பி வராத பிறவாமை பெற வந்தவனே மனு என்ற குருபிரான் அருளமுதுடனும் பரிசுத்த ஆவி தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடனும் அவை நிறைவானது.

## 30-06-2024 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சிவகாசி அவை
## தொகுப்பு: ஸ்ரீமதி. சரசுபதி மணிவண்ணன்

பரிசுத்த ஆவித் தெய்வம் பிரம்மோதய மெய்வழி சாலை ஆண்டவர்கள் அருளிய **வரமாகிய மானிதமது வாங்கிய...** என்ற ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே மலர்ந்தது.

**குருபிரான் அருளமுதம்:**

ஞானிகள் அருளிய வேதங்களின் பொருளறியாது உரை செய்வோர் ஞானிகளல்ல. குணக்கடல் மாமணிகளாக வரும் ஞானிகள் அவரவரின் மன்னவராக இருப்பதை இதயப்பிரகாசமாக தன்னில் அறிவதே அறிவுத் துலக்கம்.

*ஜீவசகோதரி லாவண்யா:* பிராமணன் எனும் குல மேட்டிமை, இனி பிறப்பில்லை எனும் அறியாமை யாவும் குருவருளால் விலகும்போதே புறத்தில் நாம் செய்யும் சடங்குகளின் அகமிய ரகசியம் விளங்கும். இறைவனை அறியவைத்து நம் பிறப்பறுக்கும் பிஞ்ஞகனாகிய குருகொண்டலிடமே **பிறவா வரம் தாரும்** என நாம் வேண்ட முடியும். காலத்தின் ரகசியம் உணர்த்தி, செல்லும்நாள் சென்றிடாது காத்து, நம்மை நற்கதிக்கு ஆளாக்கும் வல்லபம் உள்ளவரே குருபிரான்.

*ஜீவசகோதரர் வாசுதேவன்:* பிறந்து வளர்ந்து பூனூல் அணிந்து, இறந்தபின் அதை அறுக்கும் சடங்கு சம்பிரதாயம் கொண்ட அறியாமையில் உழலும் பிராமண குல மேட்டிமை உள்ளவனை, அறிவுத் தெளிவில் ஆக்கி சுக்லாம் பரதம் எனும் மந்திரப் பொருளை தரிசிக்கச் செய்பவரே குருபிரான். குருவருளால் அறுபுரி நூலும் பிராண நிலையும் அறிந்து, நெருப்பாறு மயிர்ப்பாலம் தாண்டி, உடல்கடந்து உயிர்வழி பற்றி ஆத்ம வீடடையும் செயலை சாவு வருமுன் சாகப்பழகியே அறிய முடியும்.

*ஜீவசகோதரி பொன்லக்ஷ்மி:* அவரவரின் நாமத்தை தரிசிக்கச் செய்து பிறவிக்கடல் கடத்தும் குருவின் நாத ஒலியே அசல் கல்வி. ஓயாத் தொழுகையின் ரகசியம் உணர்த்தும் இயல்மொழி அண்ணலின் இயல்புக்கு இசைவதின் மூலமே ஞானத்தை அடைய முடியும். அனித்திய உடலில் உள்ள னித்தியப் பொருளை அறிந்து, காலமற்ற இடத்தில் குடியேறி வாழ்வதே வாழ்வு. வஞ்சப்புலன் செய்யும் சதியை வெல்ல ஒரு பேரறிவாகார துணையை தேடி அடைவதே மனிதனின் தலையாய கடமையாகும்.

*ஜீவசகோதரி அருணா:* இழைக்கும் வைரம் ஜொலிப்பது போல், குருவருளால் தீட்டப் பெறும் அறிவுத் தெளிவுடன் அழிதேகத்துள் இருக்கும் அழியா சூக்குமத்தில் குடியேறி வாழும் செயலே பிரம்மவித்தை. அகத்தில் அறிவாக இருக்கும் ஜீவனே புறத்தில் செல்லும் போது அழிவாகிறது.



Copyright © AMNA Trust, Chennai 

நம் வாழ்நாளை குறைக்கும் மனதில் தோன்றும் தீய எண்ணத்தை மாற்றி, வாழ்நாளை மீட்டு நற்கதி அடையச் செய்பவரே குருபிரான். அவர் அருளும் யோக அப்பியாசமே தியானத்திற்கு மூலமான குருவின் திருவுருவை தரிசிக்கச் செய்யும். காற்றைப் பிடிக்கும் கணக்கு அருளும் குருவின் தயவே காலனை வெல்வதற்கான ஒரே உபாயம்.

*ஜீவசகோதரி சாந்தினி:* மனுவின் இதயத் தாமரையில் பரிசுத்த ஆவியாக இறைவன் குடியேறி இருக்கும் இத்தேகத்தில் ஆவிப்பொருளாக இருப்பதே நாம். பஞ்சவுடல், பஞ்சகோசம், முக்குணம் கொண்ட மனிதனின் அழிவற்ற ஆன்மா வினையால் தேகமெடுக்கிறது. பரிசுத்த ஆவியாக வரும் குருவின் வாய்மையே நம்மை அடக்கத்தில் ஆக்கி, தேகமுக்தி அளித்து தேவ நிலைக்கு உயர்த்துகிறது.

*ஜீவசகோதரி இன்பலதா:* நம் சிற்றறிவால் அறிய இயலாத சுயம்பிரகாச செம்பொருளை ஆசானின் சொல்லக விளக்காகிய ஜோதி மூலம் மனம் செம்மையாகிக் காண்பதே அறிவு. மங்கள நாயகனாகிய இறைவனை நம் உள்ளத்தில் ஒலி ஒளி மூலமாக அறிவதே தன்னை அறிதல். பிறவிப் பிணி தீர்க்கும் மாமருந்தே செந்தமிழாக, செங்காந்தள் மலராக உள்ளது. சர்வ மதங்களும் கூறும் இறைவனின் இருப்பிடமாகிய இதயத்தை குருவருளால் காண்பதே பிரம்மவித்தை.

*ஜீவசகோதரர் மஞ்சுநாதன்:* நமது உடல் நம் உடமைப் பொருள் என குருவின் அருள் கொண்டே அறிய முடியும். வேதத்தின் ஒவ்வொரு எழுத்தும் மந்திரம் என்பதை பழகியே அறிய முடியும். குருவின் கருணையால் மறுபிறப்பு பெற்ற பின்பே, பாவ-புண்ணியமும், பொய்-மெய்யும் சைவ-அசைவமும், நவகிரகமும் பஞ்சபூத நிலைகளின் அகமிய ரகசியமும் அறிந்து அறிவுத் தெளிவு பெறமுடியும்.

*ஜீவசகோதரர் சங்கர்:* மனுவின் அகம் சார்ந்த உண்மை ஆசான் அருளால் பழகி அறியக் கூடிய ஒன்று. தன் பெருவெளியாகிய சாலையில் இருக்கும் தமிழே, கிரந்த ரகசியத்தை வெளியாக்க வல்லது. குருவருள் கிட்டும் காலமே வசந்த காலம். மனம், தான் உதித்த இடத்திற்கு செல்வதே மனம் திரும்புவது என்பதாகும்.

ஜீவசகோதர சகோதரிகளின் முத்திப் பேருரையைத் தொடர்ந்து பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை நிறைவானது.



Copyright © AMNA Trust, Chennai July 2024

## இசை வகுப்பு
## தொகுப்பு:  ஸ்ரீமதி. லாவண்யா வாசுதேவன்

### 09-06-2024 ~  ஞாயிற்றுக்கிழமை

சாலை ஆண்டவர்கள் அருளிய **காவலான புராதன வேதியர்...** என்ற குரு ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது. **சுழியாகிய முணை கண்டபின்...** என்ற **மாணிக்க வாசகர் அருளிய திருஞானத் தாழிசைப் பாடல்** ராக தாளத்துடன் பாடுவதற்கான பயிற்சியுடன் அவை இனிதே நிறைவானது.

### 16-06-2024 ~  ஞாயிற்றுக்கிழமை

சாலை ஆண்டவர்கள் அருளிய **அழியாப்பதி குடியேறிய...** என்ற ஞான முறையீடு ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது. தொடர்ந்து,

**ஆதிச்சா லைனாட்டு - மெய்வழி**
**ஆண்டவர் மக்கள் குலம்**
**னீதிப்பெ ருங்குடி மாலைப்பா னைப்பலி**
**- பொங்கலோ பொங்கல்**

என்ற **பானைப்பலி பாடல்** ராக தாளத்துடன் பாடுவதற்கான பயிற்சியுடன் அவை இனிதே நிறைவானது.

### 30-06-2024 ~  ஞாயிற்றுக்கிழமை

சாலை ஆண்டவர்கள் அருளிய  **இடப்பாக ஆசாரக் கண்ணி** ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்து, தொடர்ந்து,

**வாஞ்ஞாலிப் பழம்புலமை மன்னரொரு**
**புடைசூழ்ந்து வயங்கா னிற்ப...**

என்ற **ஆடலங் ஙன்னி**யின் காப்பு செய்யுள் மோகன ராகத்தில் பாடுவதற்கான பயிற்சியுடன் அவை இனிதே நிறைவானது.

## குரு வா ஆழ்க! குருவே துணை!



Copyright © AMNA Trust, Chennai        July 2024

19

*குருவின் அவலோகத்தை (பார்வையை) யடைந்நு அவரது பிரசாதத்தால் சர்வ சங்ஙத்தையும் விட்டவனாய்த் தனித்தவனாய் ஆசையற்றவனாய்ச் சாந்நனாய் னிலைத்திருக்க வேண்டும்.*

***~ குரு கீதை***



Copyright © AMNA Trust, Chennai

# ஆதி மார்க்க னீதி அவையின் 2024 – ஜூன் மாதம் நிகழ்வுகள்

**02.06.2024 - ஞாயிற்றுக்கிழமை:** குருபிரான் சாலை ரவி அப்பா அவர்கள், பிரம்மதேசம், காஞ்சிபுரம் எழுந்தருளி மெய் இச்சை ஆர்வம் கொண்ட மக்களுக்கு அருளமுதம் வழங்கினார்கள்.



**17.06.2024 – திங்கட்கிழமை:** குருபிரான் சாலை ரவி அப்பா அவர்களின் ஆசீர்பாதத்துடன் ஜீவதம்பதியர் பழனிசெல்வராஜ் - அன்னலட்சுமி அவர்களின் புதல்வி. **பொன்பிரியா - கோகுல்ராமன்** இவர்களின் திருமண வைபவம் சிவகாசியில் நடைபெற்றது.








Copyright © AMNA Trust, Chennai 

**28.06.2024 – வெள்ளிக்கிழமை:** குருபிரான் சாலை ரவி அப்பா அவர்களின் ஆசீர்பாதத்துடன் ஜீவதம்பதியர் சாலை ரமேஷ் - ஆண்டாள் அவர்களின் புதல்வி. **சாலை நன்மதி (எ) மீரா - அரவிந்தன்** இவர்களின் திருமண வைபவம் சென்னையில் நடைபெற்றது.






Copyright © AMNA Trust, Chennai

**குருபிரான் தங்களின் திரு நோக்கினின்றும் நோக்கிய பிரகாரம் ஆதி மார்க்க னீதி அவையின், 2024 ஜூன் மாதம் குருபாதம் போற்றி நல்லுணர்வுடன் நல்லுள்ளம் கொண்டு நன்கொடை வழங்கிய நன்மக்களின் எண்ணிக்கை - 64**

**அனைவருக்கும் நன்றி !!!**

**AMNA அறக்கட்டளைக்கு நன்கொடை வழங்க ஆர்வம் உள்ளவர்கள், கீழ்கண்ட வங்கிக் கணக்கில் அனுப்புமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.**

**Account Name: Aathi Margha Neethi Avai**
**Account Number: 50200047470073**
**IFSC: HDFC0000323**
**Branch: Mylapore**



Copyright © AMNA Trust, Chennai 

All Rights Reserved

***Published by:***
***AMNA TRUST (Registration No. 163/2019)***
***13/2, Hyder Garden 2nd Street, Otteri ,***
***Chennai – 600012***

***www.amnatrust.org***

**Contact Us**:

*Email: write2amnatrust@gmail.com*

*YouTube Channel: https://youtube.com/c/amnatrust/*

*Facebook Page: https://www.facebook.com/amnatrust/*

***பின்குறிப்பு***: *இம்மின்னணுச்சஞ்ஞிகையில் தவிர்க்க இயலாது வரும் சில தட்டச்சுப் பிழைகளை அங்கத்தினர்கள் பொறுத்து அதனைத் தங்கள் பிரதிகளில் திருத்தி படித்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம். பிழைகளைத் தவிர்ப்பதற்கான முயற்சியை வெளியீட்டு குழு தொடர்ந்து மேற்கொள்ளும்.*

***The Editorial Team:***

*Shri. Sankar, Sivakasi*
*Shri. Venkatesa Muthu, Chennai*
*Shri. Vadivelan, Chennai*
*Shri. Manimaran, Chennai*
*Shri. Thiyagarajan, Chennai*
*Shri. Chiranjeevi, Chennai*

*Issue 36 – Month: July 2024*